

Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-19 இதழ்-4 ஏப்ரல் - 2006

கிறிஸ்துவின் சபை
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்க தரிசனமும் அதன் நிறைவேறுதலும் ... 10
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 21
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 23
7. தேவன் மனிதர்களை புகழ்கிறாரா ? ........ 27
8. நீ அங்கே கன்மலையில் நில்லு ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 19 April - 2006 Issue - 4

ஆசிரியர் உரை

## குளிர்காய்ந்து கொண்டிருந்தான்

**பொது**வாகப் பருவநிலையை அதன் தன்மைக்கேற்ற வகையில் நான்கு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்று குளிரைக் கொண்டு வரும் மழைக்காலம். இந்தக் குளிர்காலம், பூமியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும், அவை அமைந்திருக்கும் தட்பவெப்ப சூழ்நிலைக்குத் தகுந்தவாறு ஏற்படும். சிலநாடுகளில் பல மாதங்களுக்கும், வேறு பல நாடுகளில் சில மாதங்களுக்கும் இந்தக் குளிர்காலம் நீடிக்கும். இக்காலத்தில், ஆங்காங்கே வாழும் மனிதன், குளிரின் பாதிப்பிலிருந்து தன் சரீரத்தை இதமாக்கிக்கொள்ள, அவன் வாழ நேர்ந்த பகுதிக்கேற்றவாறு பலவகையான உத்திகளை மேற்கொண்டு வந்திருக்கிறான். இப்படி மனிதனால் மேற்கொள்ளப்படும் முறைகளில் மிகவும் பழமையானதாக இருந்து, இன்றளவும் தொடர்கின்ற ஒரு வழக்கம், நெருப்புண்டாக்கிக் குளிர்காய்வது. ஒருவேளை விஞ்ஞான யுகத்தின் அசுர வளர்ச்சி விண்ணை முட்டிவிட்டதென்று இந்நாட்களில் நாம் பெருமையடித்துக்கொண்டாலும், இப்பழைய முறை வழக்கத்திலிருந்து இன்னும் ஒழிந்து போகவில்லை. இன்றளவும், குளிர்காலங்களில் இம்முறையை நம்முடைய கிராமங்களிலும், ஏன் நகரங்களிலும் கூடக் காணமுடியும்.

ஒருவன் குளிரின் பாதிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள நெருப்புண்டாக்கிக் குளிர்காய்வது எந்த வகையிலும் தவறானதல்ல. குளிர்காயும் ஒருவனை யாரும் பெரிதாகக் குறை சொல்லமாட்டார்கள். உண்மையில், தன் சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்ள ஒருவன் செய்யும் முயற்சியைக் குறைசொல்வது நியாயமுமல்ல. இருப்பினும், புதிய ஏற்பாட்டிலுள்ள மத்தேயு தவிர ஏனைய நற்செய்தி நூல்களை நாம் கவனமாக வாசிக்கையில் பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்ற பகுதிக்கு நாம்

வரும்போது, நம்மையும் அறியாமல் நமக்குள்ளாக லேசாக உதைக்கும். அதுவும், யோவான் நற்செய்தி நூலில், **ஒரு ஏழு வசன இடைவெளியில்**, பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்று இரண்டு முறை வரும்போது, பரிசுத்த ஆவியானவர் ஏன் இக்காரியத்தை இப்படிச் சொல்லுகிறார் என்ற கேள்வியையும் நமக்குள்ளாக அது எழுப்பும். அவன், அச்சமயத்தில் குளிர்காய்ந்து கொண்டிருந்தது நியாயமானதாக இருந்திருந்தால், வேதாகமம் இப்படிப் பேசத் தேவையில்லையே என்றும் எண்ணவும் தோன்றும். வேத வசனம் ஒன்றையும் ஒருபோதும் தவறாகவோ அல்லது மிகைப்படுத்தியோ சொல்லாததாலால், இப்படிச் சொல்லியிருப்பதற்கு ஏதாவது ஒரு சிறப்புக் காரணம் இருக்குமோ என்றும் நமது சிந்தனையைக் கிளறிவிடும். ஏன், நான் சொல்வது ஓரளவுக்காகிலும் சரிதானே!

இப்படி சிந்தித்ததின் விளைவுதான் இம்மாதத்திற்கான தலைப்பு. பேதுரு குளிர்காய்ந்த நெருப்பண்டை நாம் போகும்போது, நமக்குப் பயன்படும் சில பாடங்கள் கிடைக்கும் போல்தான் தெரிகிறது. ஆகவே, நாம் கிட்டப்போய் நம்மைச் சுட்டுக்கொள்ளாமல் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போமா?

அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக, இச்சம்பவத்திற்கான பின்னணி பற்றிக் கொஞ்சம் பார்த்துவிடுவோம்.

பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருந்த சம்பவம், இயேசுவின் ஊழியம் விமரிசையாக நடந்த நாட்களில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அல்ல. மாறாக, அவருடைய பூமிக்குண்டான ஊழிய நாட்கள் நிறைவேறும் நேரம் நெருங்கி, வேதவாக்கியங்கள் அவரைப்பற்றி முன்னுரைத்த காரியங்கள் நிறைவேறும் வேளை வந்தபோது நடந்த ஒன்று. ஆம், அதற்கு சற்று முன்பாக, நம்முடைய ஆண்டவர், தான் தெரிந்து கொண்ட சீடர்களோடு கெதரோன் ஆற்றுக்கு அப்புறமுள்ள கெத்சமனே தோட்டம் சென்றார் (யோவா. 18:1) அப்பொழுது அவரை, ஒரு திருடனைப் பிடிப்பது போல பிடிக்க வந்த போர்ச் சேவகர்களோடும் மற்றும் பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியர்களோடும் பதுங்கி வந்த கயவன் யூதாஸ், எந்த வொரு பந்தபாசத்திற்கும் அப்பாற்பட்டதொரு முத்தத்தால் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் (யோவா. 18:3, மத். 26:49). இப்படிப்பட்ட ஒரு முத்தம் உலக வரலாற்றில் ஒருபோதும் இடப்பட்டதில்லை. இனி இடப்படப் போவதுமில்லை!

சரி, அங்கே, ஒரு சுவாரசியமான உரையாடலுக்குப் பிறகும், ஓர் எக்கச்சக்கமான சம்பவத்திற்குப் பிறகும் இயேசு பிடிக்கப்பட்டு (18:3-10) கட்டப்பட்ட நிலையில், யூதமார்க்கத்தின்படியான முதல் விசாரணைக்காக, அவ்வருடத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் மாமனான அன்னாவுக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டார். (18:12-23). பிறகு, அந்தக் கட்டு அவிழ்க்கப்படாத நிலையில், இரண்டாவது விசாரணைக்காகக் காய்பாவுக்கு முன்பாக கொண்டு போகப்பட்டார் (24-27). அதன்பிறகு, ஆட்சியும், அதிகாரமும் கையிலிருந்தும், கையாலாகாத மனிதனாகக் காணப்பட்ட பிலாத்துவுக்கு முன்பாக, ரோமச்சட்டத்தின்படி விசாரிக்கப்

படுவதற்கு இரண்டு முறை கொண்டு போகப்பட்டார் (18:28-38, 39-40). அப்படிக் கட்டப்பட்ட நிலையில், அதாவது, யூதச்சட்டப்படி விசாரிக்கப் படுவதற்காக கொண்டு போகப்பட்டார் அல்லவா அப்பொழுது தான் நடந்துள்ளது. (18:18,25) நம்ம ஆள் குளிர்காய்ந்த சம்பவம்.

நான் ஏற்கனவே சொன்னது போல குளிர்காய்வது ஒன்றும் தவறல்ல. ஆனால், இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டு, சிறப்பாகப் போதிக்கப்பட்டு, அவருடைய சீடர்களில் துடுக்கானவர் என்ற அங்கீகாரம் பெற்ற இந்த பேதுரு, எந்தச் சூழ்நிலையில் குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதே மிகவும் கவனிக்கத்தக்கது. ஆம், இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு நியாயம் என்ற பெயரில் அவர் அநியாயமாய் விசாரிக்கப்பட்ட போது, அரண்மனைக் குள்ளே காரியங்கள் காரசாரமாக நடந்து கொண்டிருக்கும் போது, தான் என்ன செய்கிறோம் என்பது தெரியாமல், தான் என்ன செய்ய வேண்டுமென்பதும் புரியாமல், குளிர்காய்ந்து கொண்டிருந்துள்ளான். அப்பொழுது பேதுரு, இயேசுவைக் குற்றம் சாட்டினவர்கள் பக்கமாகவும் நிற்கவில்லை, முற்றிலும் இயேசுவுக்கு ஆதாரவான நிலை எடுத்து அவருக்குப் பக்கபலமாகவும் இருக்கவில்லை என்றே தெரிகிறது.

ஒரு முக்கியமான கட்டத்தில், எந்த முடிவும் எடுக்கத் திராணி யற்றவனாய் காணப்பட்டுக் "குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா இயேசு இவனைக் கலிலேயாக் கடலோரத்தில் அழைத்தார்?" (மத். 4:18) செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாமல், குளிர் காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா, "உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்கு வேன்" (மத். 4:19) என்று சொன்னார். தான் யாரென்பதை சாதுரியமாக மறைத்துக்கொண்டு, கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலும் பொய்யைக் கூசாமல் ஊதி குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா, "யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்" (மத். 16:17) என்று ஆசீர்வதித்தார். சோதனையான நேரத்தில், பிதுபிது என்று முழித்து, வேடமணிந்து குளிர்காயும்படியாகவா "மூன்று ஆண்டுகள் பயிற்சி தந்தார்? சொல்லுங்கள். நிச்சயமாக இல்லை, இல்லவே இல்லை.

ஆயினும், இந்தத் துடுக்கு ஆசாமி, இயேசு விசாரிக்கப்பட்டபோது, தன் பொறுப்பைத் தட்டிக் கழித்தவனாக நிர்க்கதியாய்க் காட்சிதந்து, இவன் செயலைப் பரிசுத்த ஆவியானவர், ஒரு ஏழு வசன இடைவெளியில், இரண்டு முறை நாசூக்காகக் குத்திக்காட்டும்படி நடந்து கொண்டான். இவன் அங்கே செய்தது நியாயமாக இருந்திருக்குமானால், கண்டிப்பாக சத்திய ஆவியானவர் இப்படிக் கோடிட்டுக் காட்டியிருக்கமாட்டார் என்று நம்பும் படியாகத்தானே உள்ளது. அப்படித்தானே! ஆகவே, பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்த்துப் பயனடைவோம்.

## I <u>முடிவெடுக்க முடியாத இடத்தில் நின்றான்</u>

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவன் முடிவெடுக்க முடியாத ஒரு இடத்தில் நின்றான் என்பது.

முடிவெடுக்க முடியாததைக் காட்டிலும் ஒரு பெலவீனமான நிலை மனிதனுக்கு வேறெதுவும் கிடையாதென்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது ஒருபுறம் இருக்கட்டும். இதைப்படிக்கும் போது, நமக்கே, ஏன் இந்தப் பேதுரு இப்படிச் செயல்பட்டான் என்று தானே எண்ணத் தூண்டுகிறது. அதுவும் தன்னால் நேசிக்கப்பட்ட ஒருவர், எக்கச்சக்கமான சூழ்நிலையில் இருக்கும்போது, அவருக்கு அடுத்து என்ன நடக்குமோ என்பது இவனைப் பொறுத்தளவில் மர்மமாக இருக்கும் போது, இவனால் எப்படி இதுபோல் இருக்க முடிந்தது? அதுவும், இவன் குருவாகிய இயேசு, **"என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்"** (மத். 12:30) என்று உபதேசித் திருப்பதைக் கிட்ட இருந்து கேட்டிருந்தும் எப்படி இப்படியிருக்க முடிந்தது?

பரலோகத்தின் தேவன், அவரை நேசிக்கின்ற பிள்ளைகள் முடிவெடுக்கும் திராணி உள்ளவர்களாகவும், செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படுகிறவர்களாகவும் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார். தலைமைத்துவப் பண்பில், மோசேயைக் காட்டிலும் சிறந்தவனென்று தேவதாசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் யோசுவா, ஒரு கட்டத்தில், முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தபோது முடிவு எடுங்கள் என இஸ்ரவேலர்களை நெருக்கினான் (யோசு. 24:15). இன்னும், பழைய ஏற்பாட்டின் சீரிய கதாபாத்திரமான மோசே, முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தபோது சரியான முடிவெடுத்து செயல்பட்டதை பரிசுத்த ஆவியானவர் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு சொல்லும்போது, விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப் படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான் (எபி. 11:24,25) என்று மெச்சியிருக்கிறார். இன்னும் புதிய ஏற்பாடு, அப்போஸ்தலன் பவுலைக் குறித்து சொல்வதையும் கவனியுங்கள். அவன் **தனக்கு லாபமாயிருந்த எவைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணுமளவு** ஒரு முடிவுக்கு வந்துள்ளான் (பிலி. 3:11) என்றல்லவா கூறுகிறது.

அன்பானவர்களே, நாம் ஒவ்வொருவரும் மோசே போல, யோசுவா போல, இன்னும் அப்போஸ்தலன் பவுல் போல செயல்பட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறாரேயொழிய, மற்றபடி, நம்ம பேதுரு இங்கே செயல்பட்டது போலல்ல. தங்களுடைய வாழ்க்கையில் முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் முடிவெடுக்க முடியாமல் இழந்து போனவர்கள் நிறையப்பேர் உண்டு. அவர்களின் ஈன வரிசையில் நாம் யாரும் சேர்ந்து விடக்கூடாது.

ஆம், மாற்கு நற்செய்தி நூலில், நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு ஓடி வந்த வாலிபன், நித்திய ஜீவனா? உலக செல்வமா? என்று முடிவெடுக்க

முடியாததாலேயே துக்கத்தோடு திரும்பிப் போனான். (மாற். 10:17-22). இயேசுவிடம் வந்து துக்கத்தோடே திரும்பிப்போய், சரித்திரம் படைத்த ஒரே மனிதன் இவனாகத்தான் இருக்க முடியும். இவன் விரும்பிய **நித்திய ஜீவனை** பெற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கான ஒரே காரணம், முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் முடிவு எடுக்கும் திராணியற்றவனாய் காட்சி தந்ததே.

இதை வாசிக்கும் அன்பரே, நாம் ஒவ்வொருவரும் எப்படிப் பட்டவர்களாய் உள்ளோம்?. தேவனுடைய காரியத்தில், இயேசுவுக்கடுத்த உபதேச காரியங்களில், பரத்துக்கடுத்த வாழ்க்கையில் சரியான முடிவு எடுக்கிறவர்களாக உள்ளோமா? அல்லது எலியா தீர்க்கன் காலத்து மக்கள் போல **இரண்டு நினைவுகளால் இன்னும் குந்திக்குந்தி நடந்து கொண்டுள்ளோமா?** (2ராஜா. 18:21) சிந்திப்போம். நாம் ஒவ்வொருவரும், நீதிக்கும், அநீதிக்கும் இடையில், சத்தியற்கும், அசத்தியத்திற்கும் இடையில், உபதேசத்திற்கும், கள்ள உபதேசத்திற்கும் இடையில், இயேசு வாக்களித்துக் காட்டின ஒன்றான மெய்ச் சபைக்கும் (மத். 16:18), மனிதர்களால் கட்டப்பட்ட எண்ணிலடங்காத சபைகளுக்கும் இடையில் எது சரியென்று கண்டு முடிவெடுக்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டியது அவசியம்.

## II சௌகரியமான இடத்திலே நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம். அவன் தன்னுடைய சௌகரியத்திற்குத் தோதான இடத்திலே நின்றுள்ளான் என்பது.

அப்பொழுது, குளிர்காலமாயிருந்தபடியால் ஊழியக்காரரும், சேவகரும் கரி நெருப்புண்டாக்கி நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடனே பேதுருவும் நின்று குளிர் காய்ந்து கொண்டிருந்தான். (யோவான். 18:18) என்று வசனம் கூறுகிறது. இவன் செயலை இங்கே நாம் பார்க்கும்போது, இப்படிச் செய்தது நியாயமா என்ற கேள்வியை எழுப்புகிறதாகவே உள்ளது. இயேசுவின் சூழ்நிலை குறித்து இவன் கவலைப்பட வேண்டிய அளவு கவலைப்பட்டதாக நமக்குத் தெரியவில்லை. நடப்பது நடக்கட்டும், நாம் நம்ம வேலையைப் பார்ப்போம் என்ற எண்ண ஓட்டம் இருந்துள்ளதாகவே தெரிகிறது.

இத்தனைக்கும் இந்த இயேசு, தேவனுக்குச் சமமான நிலையிலிருந்து, பாவ மனிதர்களை மீட்டெடுக்க இந்தப் பூமிக்கு, தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து வந்தார் என்பது பேதுருவுக்குத் தெரியும். (லூக். 5:32, யோவா. 16:28). ஒரு சமயம் பேதுரு உட்பட மற்ற சீடர்களிடம், நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நெத்தியடியாய்ப் பதிலளித்தவனும் இவன்தான். (மத். 16:16). தனக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை மூன்று ஆண்டுகள் அருகிலிருந்து பார்த்த பேதுருவால், தன் சுகம் தான் முக்கியமென்று எப்படி எண்ண முடிந்தது? நம்ப முடியவில்லை. ஆயினும், வேறு வழியில்லை.

ஆனால், பழைய ஏற்பாட்டு மொர்தெகாயைப் பாருங்கள். இயேசுவின் தியாகத்தையும், அவரின் செயல்பாட்டையும் சற்றேனும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறாதவன். ஆயினும், யூத ஜனத்துக்கு எதிராக ஆணை பிறப்பிக்கப்பட்டதென்று அறிந்த போது, **"தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய், துயரமுள்ள மகாசத்தத்துடனே அலறிக்கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்துள்ளான்"** (எஸ். 4:1). இத்தனைக்கும், எஸ்தர் ராஜாத்தியாயிருந்தபடியால், இவனுக்குத் தனிப்பட்ட முறையில் ஆணையினால் ஆபத்து வந்திருக்காது. இருப்பினும் தன்னோடிருப்பவர்களுக்காக இவன் அலறித் துடித்துள்ளான். இவன் இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்ட கோலத்தையும், பேதுரு வேலைக்காரர்களின் கூட்டத்தில் நின்று குளிர்காய்ந்ததையும் ஒப்பிட்டுப் பார்த்தால் குலையெல்லாம் நடுங்குகிறது. பேருது அங்கே தவறு செய்திருக்கிறான் என்பது தெளிவாகவே தெரிகிறது.

அன்பானவர்களே, இயேசுவின் உண்மைச் சீடனாய் ஒருவன் இருக்க விரும்பினால், அவருக்காகப் பாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டுமேயொழிய, அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு சுகம் தேடுகிறவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், இன்றைய மார்க்க உலகின் யதார்த்த நிலை வேதனை தருவதாக உள்ளது. அப்போஸ்தலன் பவுல் தான் பெற்றெடுத்த விசுவாசக் குமாரனுக்கு எழுதும்போது, அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானல், அவரோடகூட ஆளுகையும் செய்வோம் (2 தீமோ. 2:12) என்றே கூறுகிறார். அவர் நாமத்தினிமித்தம் பாடுபடுகிறவர்களுக்கே **நித்திய ஜீவன்** என்று அவர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார் (மத். 19:29). ஆனால், நாமோ போகிறபோக்கில் எனக்கு நித்திய ஜீவன் வேண்டுமென்று அடம்பிடிக்கிறோம். இது எப்படி சாத்தியமாகும்?

அன்பான வாசகரே, நம்முடைய வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? கிறிஸ்துவினிமித்தம் நாம் சவால்களை ஏற்றுக்கொள்ளவும், அவருக்காகப் பாடுபடவும் ஆயத்தமாக உள்ளோமா? அல்லது என்னுடைய சுகம், என் குடும்பத்தின் நலன், அல்லது நான் போகும் சபையின் முக்கியத்துவம் தான் பெரிது என்று எண்ணி, நம்மை மையமாக வைத்து வாழ்ந்து, வாழ்க்கையை வீணடிக்கப் போகிறோமா? சொல்லுங்கள். என் சுகம் தான் பெரிது என்று எண்ணி இந்த சரீரத்தை நாம் எப்படித்தான் போர்த்து வளர்த்தாலும், இதன் ஆயுள் எழுபது என்றும் பெலத்தின் மிகுதியால் எண்பது என்றுமே வசனம் கூறுகிறது. (சங். 90:10). இந்த உலக வாழ்க்கை யாருக்கும் சதமல்ல.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், நம்ம பேதுரு போல், என் சுகம் பெரிதென்று எண்ணி வாழாமல், அப்போஸ்தலன் பவுல் போல், "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்று சொல்லி (பிலி. 1:21) கிறிஸ்துவுக்காகவும், அவர் கட்டின ஒன்றான மெய்ச்சபைக்காகவும் (எபே. 4:4).

கிறிஸ்துவின் உபதேசத்துக்காவும் (2யோவா.9) வாழ்வோம். இறுதியில் நித்திய ஜீவனைப் பெறுவோம்.

## III ஆபத்தான இடத்திலே நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் மூன்றாவது பாடம், ஆபத்தை வரவழைக்கக் கூடிய இடத்திலே அவன் நின்றான் என்பது.

அப்போஸ்தலன் பேதுரு பற்றி நம் உயர்வாகப் பேசுவதற்கு பரிசுத்த வேதாகமத்தில் ஏராளமான காரணங்கள் உண்டு. தேவனால் வெகுவாகப் பயன்படுத்தப்பட்ட மிகச் சிலரில் இவனும் ஒருவன். யாருக்கும் இதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆயினும், இவன் இயேசுவை மறுதலித்த சம்பவம் இவனது நெடிய ஆன்மீகப் பயணத்தில் ஒரு ஒரு சறுக்குப் பாதையே. இவனைப் பற்றிப் பேசிப் பெருமைப்படுவதற்கு நிறைய இருந்தும், இச்சம்பவம் ஓர் அழகிய வெள்ளைச் சட்டையில் கறுப்பு புள்ளி போன்ற ஒன்றாகவே உள்ளது.

சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று பேதுருவிடம் "ஆண்டவரே, காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன்" என்று கூறி அவன் தம்பட்டம் அடித்தபோது இயேசு சொன்னது உண்மையே. அவர் வார்த்தை கண்டிப்பாக நிறைவேறியே ஆக வேண்டும். அதில் சந்தேகமில்லை, ஆயினும், இவன் மூடன் நெடுகப் போய் தண்டிக்கப்படுவான் என்பது போல (நீதி. 22:3) வலியச் சென்று வம்பிலே மாட்டிக்கொண்டு மறுதலிக்கிறான். நமது தலைப்புக்கான வசனத்தைப் பாருங்கள். **"சீமோன் பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான்: அப்பொழுது சிலர் அவனை நோக்கி; நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்; நான் அல்ல என்று மறுதலித்தான்"** (யோவா. 18:25).

இவன் ஏற்கனவே ஒரு முறை இயேசுவை மறுதலித்துவிட்டான். இப்பொழுது இவன் நின்ற இடம் இவனை இன்னும் ஒருமுறையாகத் தவறிழைக்கச் செய்கின்றது. ஆம், ஆகாத சம்பாஷனை நல்லொழுக்கங் களைத் கெடுக்கும் (1 கொரி. 15:33). இவன் சற்றும் எதிர்பாராத நேரத்தில் ஆபத்து வந்து சேர்கிறது. ஒருவேளை, இவன் அவர்களோடு சேர்ந்து குளிர்காயச் செல்லாமலிருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாமோ? அல்லது இயேசுவோடு கூட மற்ற சீஷனைப் போல் உள்ளே போயிருந்தாலோ (யோவா. 18:16) அல்லது அரண்மனையை விட்டு வெளியே போயிருந்தாலே இந்நிலையத் தவிர்த்திருக்கலாமோ? வாய்ப்பு உண்டென்றே நம்பத் தோன்றுகிறது.

ஒருவன் தன் ஆன்மீக வாழ்வில் ஆபத்து உள்ள இடத்திற்குப் போகாமலும், ஆபத்து வரும்வரை அங்கே தரித்திராமலும் இருப்பது மிகவும் நல்லது. இவ்வரிய பண்பு பக்தன் யோபுவிடம் இருந்ததாக சர்வவல்ல தேவன் சாட்சியிடுகிறார். ஆம், அவர் சாத்தானிடத்தில் பேசின போது, யோபுவைப்

பற்றி என்ன கூறுகிறார் என்று தயவு செய்து கவனியுங்கள். அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி; **நீ எந்த தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனுமில்லை; முகந்தரமில்லாமல் அவனை நீர்மூலமாக்கும் படி நீ என்னை ஏவினபோதிலும், அவன் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்றார்** (யோபு. 2:3). இந்த யோபு போல், பொல்லாப்பு வருமென்று தெரியும் காரியங்களுக்குக் கட்டாயம் நம்மை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். பேதுரு, இயேசுவோடிராமல் குளிர்காயச் சென்றது அவனுக்குப் பிரச்சினையைக் கொண்டு வந்ததென்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

அப்படியானால் அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறோமா? நம்முடைய தனிப்பட்ட பக்தி வாழ்வில், தேவனை ஆராதிக்கும் சபை வாழ்வில், தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதால் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பின் வாழ்வில், பரலோகத்திற்குப் பாதை காட்டும் அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வில் நாம் எங்கே இருக்கிறோம்? சொல்லுங்கள்.

பேதுருவுக்கு அவன் நின்ற இடம் சுகத்தைக் கொடுத்தது போல, அநேகராகிய நமக்கும், நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் இருக்கும் இடம் பலவிதமான சுகங்களைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கலாம். ஆராதனைக்குப் போகப் பக்கமாக இருக்கிறதென்ற சுகம், பெரிய கட்டிடம் என்ற சுகம், போதனையில் கண்டிப்பில்லை என்ற சுகம், கூட்டம் நிறைய வருகிறது என்ற சுகம், பாரம்பரியம் என்ற சுகம், பண்டிகைக் கொண்டாட்டம் என்ற சுகம், எனக்குப் பிடித்தமான ஊரறிந்த ஊழியர் என்ற சுகம், எனக்கு மரியாதை கிடைக்கிறது என்ற சுகம், சமுதாய மக்களோடு இருக்கிறோம் என்ற சுகம் என்று இப்படி பல சுகங்கள் கிடைக்கலாம்.

ஆனால், சுகம் வேண்டிக் குளிர்காய்ந்து கொண்டிருந்த பேதுருவுக்கு, எதிர்பாராத நிலையில் ஆபத்து வந்ததுபோல, நமக்கும் நாம் இயேசுவோடு கொண்டிருக்கும் உறவுக்கு சடிதியாய் ஆபத்து வரும். ஆகவே, நாம் நிற்கும் இடம் சரியானதா என்று உறுதி செய்து கொள்வது அவசியம். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும் (1தெச. 5:21). குறிப்பாக, பரலோகம் பாக்கியம் இயேசு கட்டின(மத். 16:18) ஒரு சபைக்குள்ளாக (எப. 4:4) இருப்பவர்களுக்குத்தான் என்று (1கொரி. 15:25) வேதவசனங்கள் தெளிவாகச் சொல்லுகிறபடியால், நான் கிறிஸ்து காட்டின ஒன்றான மெய்ச்சபையில் இருக்கிறேனா அல்லது சுகம் தேடி வேறு எங்காகிலும் அலைந்து கொண்டிருக்கிறேனா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். சரியா?

நீங்கள் ஒவ்வொருவரும் அப்படி உறுதி செய்து பரம கானானுக்குப் பங்குள்ளவர்களாக மாற பாரத்தோடு வேண்டுகிறோம். ஆமென்!

*EZS ராஜநாயகம்*

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# ஒன்பதாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை தியானம் நேயர்கள் &
## திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

**நாள் : மே மாதம் 1,2,3 - 2006 (திங், செவ், புதன்)**

## சிறப்பம்சங்கள்

- ✤ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- ✤ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ✤ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- ✤ பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- ✤ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- ✤ வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- ✤ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- ✤ பெண்களுக்கு தனி இடவசதி.
- ✤ சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **50 /-** சிறியவர்கள் ரூ. **30 /-**

## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனமும் அதன் நிறைவேறுதலும்

வேதாகமத்தின் மையக்கருத்தும், பொருளுமாக கிறிஸ்து இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டு, புதிய ஏற்பாட்டில் வெளிப்பட்டிருக்கிறார். அவர் சொல்லும் போது, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்", என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்றார் (யோவான். 14:1). இயேசுவை நாம் விசுவாசிப்பதோடு அவரைப் பற்றி பிரசங்கிக்கவும் செய்கிறோம். நீங்களும் அவரை விசுவாசிக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் அப்படி செய்வதற்கு அநேக காரணங்களுண்டு. அந்த நோக்கத்தில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்கிறோம்.

யோவான் 1:1ல் ஆதியிலே வார்த்தையாகிய கிறிஸ்து தேவனோடிருந்தார் என வாசிக்கிறோம். சகலமும் அவர் மூலமாக உண்டாயிற்று (யோவான். 1:3). ஏதேன் தோட்டத்தில் மனிதன் பாவத்தில் வீழ்ந்த பின்பு, தேவன் சர்ப்பத்தை அல்லது சாத்தானைப் பார்த்து, "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி. 3:15) கிறிஸ்துவின் வருகையைக் குறித்துச் சொல்லப்பட்ட முதல் தீர்க்கதரிசனமிது. இவ்வசனத்தில் சாத்தானுக்கும், ஸ்திரீக்கும், அதன் வித்திற்கும், அவள் வித்திற்கும் பகை உண்டாக்குவேன் என்கிறார். கிறிஸ்து ஸ்திரீயிடத்தில் பிறந்து சாத்தானின் கிரியைகளுக்கும் அவனை பின்பற்றுபவர்களுக்கும் எதிர்த்து நிற்பார். சாத்தான், கிறிஸ்துவின் குதிங்காலை நசுக்குவான், அதாவது, அவருக்கு சிறு பிரச்சனைகளைத் தருவான். ஆனால், இயேசுவோ அவனுக்கு பெரிய அடியை கொடுப்பார். அதாவது, சாத்தானின் அந்தகார கிரியைகளின் மீதும், அவன் மீதும் வெற்றி சிறப்பார்.

அதன் பின்பு வந்த காலத்தில் கிறிஸ்துவைப் பற்றியும், அவர் வருகை பற்றியும் பல தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்டது. அதில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளவும், அதன் நிறைவேறுதலை உங்களுக்கு காட்டவும் விரும்புகிறோம். இந்த தீர்க்கதரிசனத்தில், நாம் கிறிஸ்துவின் பிறப்பு, எங்கே பிறப்பார். அவருடைய பெற்றோர்கள் அவரை எகிப்திற்கு எடுத்துச் செல்லுதல், அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளை நாம் பார்க்கப்போகிறோம்.

கிறிஸ்து, ஒரு கன்னியின் வயிற்றில் பிறப்பார் என்பது பற்றி ஏசாயா சொல்லும் போது, "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (ஏசாயா 7:14) என்கிறார். அதற்கு என்ன பொருள்? இதற்கு கிறிஸ்துவுக்கு பூமிக்குரிய தாய் இருப்பார்கள் என்றும், தந்தை இருக்கமாட்டார்கள் என்று பொருள். கன்னிகையின் வயிற்றில் பிறக்க வேண்டுமென்றால், புருஷனை அறியாத ஸ்தீரியிடம் அவர் பிறக்க வேண்டும். அவள பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியாகி ஒரு குழந்தையை பெற்றெடுப்பாள்.

அது எப்படி நிறைவேறியது என்பதை கண்டறிய, நாம் மத்தேயு 1:18-25 வசனத்தை காணலாம், "இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது : அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்தமனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு; தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

தீர்க்கதரிசியின் மூலமாயக் கர்த்தாரலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன் இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான், இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரைதெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு; அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு **இயேசு** என்று பேரிட்டான்.

**இரண்டாவதாக,** கிறிஸ்து பெத்லகேமில் பிறப்பார் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. மீகா சொல்லும்போது, "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து

புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2) என்கிறார். இப்பொழுது மத்தேயு 2:1ல் வாசிக்கையில், "ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்த பொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து..." இயேசுவின் பிறப்பைப் பற்றி விசாரித்தார்கள். ஏரோது, பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகரிடம் இயேசு எங்கே பிறப்பார் என்று கேட்டபொழுது, அவர்கள், "...யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்". அதேனென்றால்; "...யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று தீர்க்கதரிசியினால் எழுதப் பட்டிருக்கிறது என்றார்கள்" (மத்தேயு. 2:5,6).

இதே சம்பவத்தைப் பற்றி லூக்கா ஆசிரியர் எழுதுகையில், "அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று. அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப்பொழுது, யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப் படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப்போனான். அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவ காலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்.

அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி; பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னிலையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த க்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனை துதித்தார்கள்.

தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போன பின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி; நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனை பண்ணினாள் (லூக். 2:1-19).

**மூன்றாவதாக,** பெத்லகேமில் பிறக்கும் குழந்தைகளை, தன் பதவியை பறித்துவிடும் என்று ஏரோது நினைத்து கொலை செய்ய முயற்சிப்பான் என்ற தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது (எரேமி 31:15) இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை நாம் கவனித்தால், அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குப்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான். புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது. ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று, ஏரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று (மத். 2:16-18) என்று வாசிக்கிறோம்.

**நான்காவதாக,** ஏரோதின் கைக்கு தப்பி கிறிஸ்து எகிப்திக்கு போவார் என்ற தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது, ஓசியா எழுதும்போது, "இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" (ஓசியா.11:1) என்கிறார். ஒரு தூதன் யோசேப்பின் கனவில் வந்து ஏரோது பிள்ளையின் உயிரை வாங்க வகை தேடுகிறான் என்று எச்சரித்து, எகிப்துக்கு நீங்கள் போய்விடுங்கள் என்று கூறுகிறான், பின்பு வசனம் சொல்லுகிறது, "ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்தேயு 2:15).

**ஐந்தாவதாக,** இன்னும் அநேக தீர்க்கதரிசனங்களும் அதன் நிறைவேறுதலும் உண்டு. உதாரணமாக, இயேசுவை ராஜாவாக்க ஜனங்கள்

முயற்சிப்பார்கள் என்று உரைக்கப்பட்டது (சகரியா 9:9) இது, இயேசு எருசலேமிற்கு வந்த போது ஜனங்கள் அவரை ராஜா வாழ்க என்று வாழ்த்திய போது நிறைவேறியது (யோவான். 12:12-16). இயேசு காட்டிக் கொடுக்கப்படுவார் என்று சங். 4:9 திலும், அவர் முப்பது வெள்ளிக் காசுகளுக்காக யூதாசினால் காட்டிக்கொடுக்கப்பட்டார் என்று மத்தேயு 29:15திலும் வாசிக்கிறோம். இன்னுமாக, இயேசு தன்னை துன்பப் படுத்தியவர்களுக்கு முன் அமைதலாக இருப்பார். (ஏசா. 53:7) அதன் நிறைவேறுதல் மத்தேயு 27:12-14 லும் அவருடைய பாடுகள் ஏசா. 53:4-7 லும் அதனுடைய நிறைவேறுதல் 1 பேதுரு 3:18ல் சொல்லப்பட்டுள்ளது. அவர் குற்றவாளிகளோடு கொலை செய்யப்படுவார் என்று ஏசாயா 53:9-12லும் அதன் நிறைவேறுதல் லூக்கா 23:39-43 லும். அவர் உயிர்தெழுதல் பற்றி சங். 16:10லும் அதின் நிறைவேறுதல் மத். 27:63லும் நடந்தது. இப்படி நாம் சொல்லிக்கொண்டே போகலாம்.

இவைகள் எல்லாம் நமக்கு எதை நிரூபிக்கிறது; இயேசு தேவ குமாரன் என்றும், அவர் உலக இரட்சகர் என்றும் நமக்கு காட்டுகிறது. நாங்கள் இதை நம்புகிறோம். நீங்களும் இதை நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். இவைகளை படித்த ஒருவன் இது தற்செயலாக நடந்தது என்று நினைக்கவே முடியாது, ஆகவே, ஒருவன் இவைகளை கவனித்து விசுவாசித்து கீழ்ப்படிய வேண்டும்.

*J.C. சோட்* **J.C. Choate**

## நாளும் நடப்பும்

1. தமிழக தேர்தல் - தலைவர்கள் அனல்பறக்கும் பிரச்சாரம்
2. ஈராக் மசூதியில் தற்கொலை படை தாக்குதல், சுமார் 70 பேர் பலி, பலர் படுகாயம்
3. விமான நிலையங்களை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் உடன்பாடு கையெழுத்தானது
4. பலவிதமான கோரிக்கைகளை முன்வைத்து பாரத ஸ்டேட் வங்கி ஊழியர்கள் பணி நிறுத்தம்
5. இங்கிலாந்துடனான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தொடரை இந்தியா கைப்பற்றியது
6. ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் இந்திய அரசியலின் போக்கில் மாற்றத்தைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்கள் பகுதி

# உள்ளதையெல்லாம் கொடுத்தவள்

(சென்ற மாத தொடர்ச்சி)

அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப் போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் என்றார். (மாற்கு. 12:44).

இருதயத்தை பார்க்கிற நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து, தனக்குள்ளதையெல்லாம் கர்த்தருக்காக போட்டுவிட்டாள் என்பதை அறிந்து, அதைப்பாராட்டாமல் விடவில்லை. அவளுடைய நல்ல செயலை அங்கீகரிக்கிறார். வேதாகமத்திலே நாம் பார்க்கும் பொழுது, ஆதாமின் காலத்திலிருந்தே தேவனுக்கு மனிதன் கொடுக்க வேண்டும் என்ற ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. மனிதன் தனக்கு கொடுக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். நாம் எந்த அளவு பெற்றுக் கொள்ளுகிறோமோ அந்தளவு கொடுத்தலும் இருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டில், மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் பத்தில் ஒரு பாகம் கொடுக்க வேண்டுமென்று கட்டளையாகப் பெற்றிருந்தார்கள். இயேசு கிறிஸ்து பழைய பிரமாணத்தை சிலுவையிலே ஆணியடித்து விட்ட பிறகு (கொலோ 2:14) இப்பொழுது கிறிஸ்துவின் காலத்திலே வாழும் நமக்கு கொடுத்தல் பற்றி வசனம் என்ன சொல்லுகிறதென்று பார்ப்போம்.

**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.** (2கொரி. 9:7).

**நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் (1கொரி. 16:2).**

மேற்கண்ட வசனங்களில் இருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ளு கிறோமென்றால், ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கு எதைக்கொடுத்தாலும் உற்சாகமாய் கொடுக்க வேண்டும். வாரத்தின் முதல் நாளில் தான் கொடுக்க வேண்டும். அதிகமாய் கொடுக்கிறவன், அதிகமாய் பெற்றுக்கொள்கிறான்.

ஒரு குடும்பத்திலே பணத்தை கையாளுவது யாராக இருந்தாலும், கர்த்தருக்கு தாராளமாய் கொடுப்பதில் பெண்களுக்கு மிக அதிகமான பொறுப்பு இருக்கிறது. எந்த ஒரு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அதில் தேவனுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். நம் கைக்கு வருமானம் வந்தவுடன், முதலில் தேவனுக்குரியதை எடுத்து வைத்து விடவேண்டும். ஒரு பெண் நினைத்தால், பலவகையில் செலவை குறைத்து அதில் மிச்சமான தொகையை தேவனுக்கும், தேவனுக்கடுத்த காரியங்களுக்கும் கொடுத்து உதவலாம்.

உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும், வேதாகமம் சொல்லுகிறபடி கொடுத்தால், தேவனுடைய வேலைகளை இன்னும் பலமாகவும், பரந்த அளவிலும் செய்ய உதவும்.

என் இருதயம் எங்கேயிருக்கிறதென்பதை என் கொடுத்தல் காட்டிவிடும். என் இருதயம் எங்கே இருக்கிறது?. எந்த அளவு என்னுடைய கிறிஸ்தவ குணம் உறுதியாய் இருக்கிறதென்பது நான் தாராளமாய் கர்த்தருக்கு கொடுப்பதின் மூலம் பரீட்சிக்கப்படுகிறது. நான் அந்த பரீட்சையில் தேறுவேனா? ஆத்துமாக்களை ஆதாயம் செய்து கொள்வதற்கும், அவர்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லுவதற்கும் என்னுடைய காணிக்கை உதவி செய்கிறது.

எப்படி இயேசு கிறிஸ்து அன்றைக்கு காணிக்கைப் பெட்டியருகே உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தாரோ அப்படி இன்னும் என் காணிக்கையை கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நாம் கொடுக்கும் பணம் மட்டுமே பரலோகம் வரை செல்லக்கூடிய ஒரு சேமிப்பாக அமையும். என்னுடைய ஆன்மாவை நான் காத்துக் கொள்ள வேண்டுமானால் எனக்குள்ளதெல்லாவற்றையும் தாராளமாய் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். இது ஒரு ஆலோசனையல்ல, கட்டளையாக கொடுக்கப்பட்ட ஒன்று. எனவே, கட்டளைக்கு கீழ்ப்படிவது நம்மீது விழுந்த கடமை.

அருமையானவர்களே, இந்த ஏழை விதவை இத்தனை உண்மைகளையும் அறியாதவளாகத்தான் இருந்தாள். அவள் காலத்தில், எழுதப்பட்ட புதிய ஏற்பாடு இல்லை. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது முழுமையாகத் தெரியாது. இயேசு கிறிஸ்து, இரத்தத்தை சிந்தி, மரித்து, சபையை உருவாக்கவுமில்லை. ஆனாலும், கொடுக்க வேண்டும் என்பதை தெரிந்திருந்து வைத்திருந்த அவள், ஜெப ஆலயத்தில் வந்து தன் கடமையை முழுமையாக செய்து நிறைவேற்றுகிறாள். யாரைப்பற்றியும், எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. தனக்கு தெரிந்தவற்றில் முழுமையை பெற்றிருந்தாள்.

வேதாகமத்தில் பார்க்கும்பொழுது, தேவன் ஒருபோதும் ஒரு மனிதனுடைய அந்தஸ்துக்கு முக்கியம் கொடுத்ததேயில்லை. மாறாக, அவன் ஏழையாயிருந்தாலும், சாதாரண வேலை செய்கிறவனாய் இருந்தாலும், கூலிக்காரனாய் இருந்தாலும், ஆடு மேய்ப்பவனாயிருந்தாலும், வியாதியஸ்தனாயிருந்தாலும் அவன் தோற்றத்தைப் பார்க்காமல் **செயல்பாட்டைத் தான்** பார்க்கிறார். எனவே தான், இயேசுவின் கண்ணில் இந்த ஏழை விதவை பட்டாள். ஏழையாயிருந்தாலும் பணக்கார செயல் இவ்விடம் இருந்தது.

இன்றைக்கு எத்தனை பேர் கர்த்தருக்கு கொடுக்க வேண்டியதை கொடாமல், அதிலிருந்து திருடி, நம் சொந்த செலவை செய்து கொண்டுள்ளோம்? தேவன் நம் செயலை கவனித்துக் கொண்டிருக்கிறார். தேவனுடைய பாராட்டுதலை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், நம் செயல்பாடு உண்மையுள்ளதாக இருக்க வேண்டும். பிறர் பார்வைக்காக காரியம் செய்வோமானால் இயேசுவின் கண்களில் கிருபை கிடைக்காது.

இதை வாசிக்கும் அருமைச் சகோதரிகளே, கொடுக்கும் விஷயத்தில் நம் நிலை எப்படி இருக்கிறது. நம் பிள்ளைகளுக்கு கொடுத்தலின் அவசியத்தை கற்றுக்கொடுப்போம். தேவன் நம் செயலை கவனிக்கிறார். நிச்சயமாக பொய்யுரையாத தேவன் நம் செயலை ஒரு நாளைக்கு அங்கீகரிப்பார். மட்டுமல்லாமல், சுத்தமான, மெய்யான சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட நமக்குள்ளதெல்லாம் கொடுப்போம். இயேசு நம் அருகில் உட்கார்ந்து நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார். ஏழை விதவையைப் போல் செயல்படுவோம். மீதியை கர்த்தர் பார்த்துக் கொள்வார். ஆமென்!.

**– ரேச்சல் ராஜநாயகம்**


## ஆசிரியர் தேவை

**காங்கயத்தில் நடந்து வரும் எக்லீசியா வேதாகமக் கல்லூரிக்கு, புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும், மொழியாக்கம் செய்யும் அளவு ஆங்கிலப்புலமையும், நற்சாட்சியும் கொண்ட ஆசிரியர் உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும்.**

**இயக்குநர்**

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி, காங்கயம் - 638 701.**

**✆ 04257 - 230030, 98427 - 30382**

வாலிபர் பகுதி

# வாலிபனே! எங்கே போகிறாய்..?

**வா**லிப நெஞ்சங்களுக்கு இயேசுவின் நாமத்தில் இனிய நல்வாழ்த்துக்கள்! ஒரு மனிதன் எவ்வழியில் நடக்கின்றான் என்பதை வைத்து, அவன் எங்கே போகின்றான், அவ்வழியின் முடிவு என்ன? என்பதைச் சொல்லிவிட முடியும். அவன் ஒளியின் பாதையில் நடக்கிறானா? அல்லது இருளின் பாதையில் நடக்கிறானா என்பதை அறிந்து அவனுடைய முடிவு என்ன? அது சமாதானமா, சஞ்சலமா என்பதையும் அறிந்து கொள்ள முடியும் ஆகவே, வாலிபர்களே நீங்கள் அடியெடுத்து வைத்துள்ள பாதை ஜீவ வழியா, மரண வழியா என்பதை அறிந்து கொள்ள ஆராய்ந்து பார்ப்போம்.

**I மரண வழி :** - தேவன் மனுஷனுக்கு முன்பாக இரண்டு வழிகளை வைத்துள்ளார் 1) ஜீவ வழி 2) மரணவழி என்பவைகளே (எரே. 21:8) நீதியைச் செய்கிறவன் ஜீவ வழியிலும், பாவம் செய்கிறவன் மரணவழியிலும் நடக்கின்றான். ஆம், பிரியமானவர்களே மனிதன் பாவம் செய்தவுடனே அவன் மரண வழியிலே அடியெடுத்து வைக்கிறான். ஆனாலும், சர்வ வல்ல தேவன் மனிதனை யோசிக்கும் வல்லமையுள்ளவனாகவும், நன்மை, தீமை இன்னது என்பதை பகுத்தறியும் சக்தி உள்ளவனாகவும் படைத்தார் (நீதி. 16:9) ஆம், எதைப் பின்பற்றுவது எவ்வழி நடப்பது என்பதை யோசிக்கும் இதயம் அவனில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், ஆதி முதல் மனுஷனுக்கு மரண வழிகள் செம்மையானதாகவே தெரிந்துள்ளது. எப்படியென்றால், ஏதேன் தோட்டத்திலிருந்து மரணத்தின் கனி மனிதனின் பார்வைக்கு இன்பமும் புசிப்புக்கு நல்லதுமாயிருந்தது என்று வேதத்தில் உள்ளது. (ஆதி. 3:6) பார்வைக்கு இன்பம் தந்த கனியானது மரணத்தைக் கொண்டு வந்தது. அதேபோல் மனுஷனுடைய பார்வைக்குச் செம்மையாய் தோன்றுகின்ற வழி கூட மரணத்தை உண்டாக்குகிறதென்று ஞானி சாலொமோன் கூறுகிறார் (நீதி : 14:12).

ஆம் பிரியமான சகோதரனே! சகோதரியே இதுதான் உலகம் குதூகலித்து மனம் தேடும் சுகத்தை அனுபவிக்க இதுதான் தருணம் என்று மனம் போன போக்கிலே போய், இனிமையான வாழ்வு இதுதான் திருப்தியான வாழ்வு இதுதான் என்றும் சொல்லி, பிசாசின் மடியிலே, பாவத்தின் பிடியிலே கிடந்து ஆஹா.... என்ன சுகம் என்று அகம் மகிழும் வாலிபனே!. உன்னை நீயே எண்ணிப்பார். மாறுபாடான இருதயம், தாறுமாறான பாதை இவைகள் எப்போதுமே தேவனுக்கு அருவருப்பானது (நீதி : 4:23).

மாறுபாடான பாதையிலே தாறுமாறாய் மனுஷன் நடப்பதற்குக் காரணமே காவல் இல்லாத இருதயமும் (நீதி. 4:23) மனுஷனால் அடக்கி ஆளப்பட முடியாத மனமும் தான் (நீதி. 16:32) எந்த ஒன்றை இருதயத்தில் வைத்து இச்சிக்கின்றாயோ அது பாவத்துக்கு வழிவகுக்கும் (நீதி. 6:25), இப்படி மாறுபாடான இருதயம் உள்ளவர்கள் நன்மையையும், ஜீவனையும் கண்டடைவதில்லை. மாறுபாடானவனுடைய வழியிலே முள்ளுகளும் கண்ணிகளும் உண்டு என ஞானி சாலமோன் சொல்லுகிறார் (நீதி : 22:5). தன் இருதயத்தின் இச்சையை அடக்க முடியாத மனுஷனின் நிலை என்ன? அது மதிலிடிந்த பாழான பட்டணம் என்கிறார். அதற்குப் பாதுகாப்பில்லை எதிரிகளின் தாக்குதலிலே அது தப்பாது (நீதி. 25:28) ஆகவே, நம்முடைய இருதயம் அரணான பட்டணம் போல் இருக்க வேண்டும். அந்தகாரத்திலே சிக்குண்ட இருதயமுள்ளவர்கள் உணர்வில்லாதவர்களாய் அசுத்தங்களை ஆவலோடே நடப்பிப்பார்கள் இவர்களுக்கு காரிருளே வைக்கப்பட்டுள்ளது (யூதா. 12,13, 2 பேதுரு : 2:9,10) அன்பான சகோதரர்களே பார்வைக்கு இன்பமாயிருக்கிறது, கேட்பதற்கு சுகமாயிருக்கிறது என்று மாம்சத்தையும், மனசையும் அதற்கு அடிமைப்படுத்திவிடாதே. அதன் முடிவு மரணம் என்பதை அறிந்துகொள்.

<u>**II ஜீவ வழி :**</u> ஒளி ஜீவனுக்கு வழிகாட்டுகிறது. ஆம், கட்டளையே விளக்கு வேதமே வெளிச்சம். போதக சிட்சையே ஜீவ வழி என்று ஞானி சாலமோன் சொல்லுகிறார். (நீதி : 6.23) இருள் மரணத்துக்கு வழிகாட்டுகிறது ஒளி ஜீவனுக்கு வழிகாட்டுகிறது. நானே உலகின் ஒளி என்று ஆண்டவர் இயேசு உலகத்துக்கு தம்மை காண்பிக்கின்றார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று தம்மை அடையாளப்படுத்துகின்றார். அவருடைய அடிச்சுவடுகளை பின் தொடர்ந்து செல்வதே அவருடைய வழியில் நடப்பதாகும். நாம் இருளில் அகப்படாதபடிக்கு ஜீவ ஒளியின் வழியில் நடக்க வேண்டும். யோவான் : 12:35,36 ஆகவே, இயேசுவைக் கற்றுக் கொண்டு நடப் போமானால் நிச்சயமாக ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளலாம். ஆம், வேதத்தின்படி நடக்கிறவர்கள் உத்தம மார்க்கத்தார் (சங்கீதம் :19:1), அவர்களே ஜீவ மார்க்கத்தில் நடக்கிறார்கள். திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களும், வாக்குத்ததங்களுக்குப் பங்குள்ள வர்களும் இவர்களே. ஆகவே, வாலிபர்களே நாம் ஒருவராலும் அசட்டை பண்ணப்படாமல் கிறிஸ்துவுக்குரியவர்களாகவே நம்மை நாம் அடையாளப்படுத்திக்கொள்ள வார்த்தையிலும், நடக்கையிலும் அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மற்றவர்களுக்குச் சாட்சியாக ஜீவிக்க வேண்டும். நம்முடைய விசுவாசம் மாயமற்றதாயிருந்து நாம் வளர்கிறதும், தேறுகிறதும் யாவருக்கும் தெரியவரும் பொருட்டு நம்முடைய விசுவாசம் வெளிப்படையானதாக இருக்கட்டும் (1 தீமோ. 4:12-15).

அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள் நம்முடைய பக்தியும், ஆராதனையும். யாருடைய எப்படிப்பட்ட ஐக்கியத்தோடே கூடியது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சுத்த சுவிசேஷத்தோடும், சுத்த இருதயத்தோடும் ஆராதனை செய்கிறவர்களின் ஐக்கியத்தைத் தேட வேண்டும் (2 தீமோ. 2:22, யாக் : 1:27) ஆகவே, சத்தியம் என்று பொய்யாய் பேர் பெற்றிருப்பவைகளின்றும் போலியான ஐக்கியத்தினின்றும் நம்மை நாம் விலக்கிக் காத்துக்கொண்டு. கர்த்தருக்கே உரியவர்களாக அவர் பட்சம் நிற்போம்! சிலுவை பாதையே ஜீவப் பாதை என்று அறிந்து சிலுவையை சுமந்து இயேசுவை பின்பற்றுவோம்.

வாலிபனே! நீ எந்த பாதையை தேர்ந்தெடுத்திருக்கிறாய்? ஜீவப் பாதையில் ஓடுகிறாயா? நித்திய ஜீவனை நோக்கித்தான் ஓடுகிறாயா? என்பதை யோசித்துப்பார். உன் கண்கள் ஜீவப் பாதையை நேராய் நோக்கக் கடவது. கண்களின் பார்வை சிதறுகின்றபோது பாதையும் மாறும். (நீதி 4:25) மகனே! உன் இருதயத்தை எனக்குத்தா என்று அழைக்கும் தேவனுடைய குரலைக் கேட்டு உன் கண்கள் அவர் வழியை நோக்குவதாக, சங்கீதக்காரன் தாவீதைப் போல நம்முடைய இருதயத்தை தேவனுக்கு முன்பாக ஒப்புக் கொடுப்போம். வேதனையுண்டாக்கும் இருளின் வழியிலிருந்து விடுதலை யாவோம்! (சங். 139 : 23,24).

உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு இளவயதும், வாலிபமும் மாயையே (பிரசங்கி. 11:10)

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**K. சேகர்**, *திருப்பூர்.*

**தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்!**

எங்களது **எக்லீசியா வேதாகமக் கல்லூரியில்** பயின்று, கடந்த எட்டு ஆண்டுகளாக கோவை மாவட்டத்திலுள்ள, **திருப்பூர் வடக்குப் பகுதியில்,** கர்த்தருடைய பணியைச் சிறப்பாகச் செய்து வருபவர் **சகோ. சேகர்** அவர்கள்

இவர் ஊழியம் செய்து வரும் கிறிஸ்துவின் சபைக்காக சுமார் **ரூ. 4,40,000/- செலவில்** சொந்தமாக இடம் வாங்கப்பட்டுள்ளது.

இந்தக் கிருபையை, அப்பிராந்திய சபையாருக்கு வழங்கிய தேவனுக்கு கோடான கோடி நன்றிகளை ஏறெடுக்கிறோம்.

சிறுவர் பகுதி

# கொமோடோ



இந்த மாதம் நாம் உலகிலேயே மிகப்பெரிய பல்லி இனத்தை சேர்ந்த "கொமோடோ" என்ற ஒரு கொடூரமான மிருகத்தை பற்றி பார்க்க போகிறோம். இந்த **கொமோடோ இனம்** கொமோடோ தீவுகளில் வாழ்கின்றன. அவை பொதுவாக செடிகள் அடர்த்தியான இடங்களில் பதுங்கி இருக்கும். அந்த வழியாக எந்த ஒரு மிருகம் வந்தாலும் அதை அப்படியே தனக்கு உணவாக கொள்ளுமாம் இந்த கொமோடோ.

சரி, இந்த கொமோடோவைப் பற்றி இப்பொழுது பார்க்கலாம். இவை 10 அடி நீளம் வரைக்கும் வளரும் மிருகம். அதாவது, ஒரு சாதாரண மனிதனின் உயரத்தை விட 2 மடங்கு அதிகம். அவை 100-120 கிலோ எடை இருக்கும். தன்னுடைய கால்களின் உதவியால் 1 மணி நேரத்திற்கு 15 மைல்கள் கடந்துவிடும்.

இந்த மிருகத்திடம் உள்ள ஒரு விசேஷ குணம், அவைகள் மிக வேகமாக தன் உணவை உட்கொள்ளும். அவைகளுக்கு கூர்மையான பற்கள் உண்டு. அதன் உதவியோடு எந்தவிதமான உணவாக இருந்தாலும் அதை

கிழித்து, கடித்து மிக வேகமாக உணவை உட்கொள்ளும். ஒரு கொமோடோ ஒரு முழு காட்டு எருமையை 17 நிமிடங்களில் உட்கொண்டுவிடுமாம். பாருங்கள், எவ்வளவு வேகமாக உட்கொள்ளுகிறது. ஆச்சரியமாக இருக்கிறது! அப்படித்தானே!

சரி, ஏன் இவ்வளவு வேகமாக உட்கொள்கிறது தெரியுமா? ஏனென்றால் அந்த மிருகத்தின் உடல் எடையில் 80% அதன் வயிறுதான். அதுதான் காரணம்.

சரி, இதினுடைய இன்னொரு விசேஷம் எது தெரியுமா? மற்ற மிருகங்களை அடித்து உண்டபின், அதன் பற்களுக்கு இடையே சிக்கி இருக்கும் உணவு துண்டுகளின் மீது பாக்டீரியாக்கள் சேர்ந்துவிடும். ஆனால், அது கொமோடோக்களை அது பாதிக்காது. ஆனால், அந்த பற்களை கொண்டு மற்ற மிருகங்களை கடிக்கும் போது அது அந்த மிருகங்களுக்கு விஷமாக மாறிவிடும். **அது கொடிய விஷமாக மாறிவிடுகிறது.**

ஆனால், தற்போது இந்த இனம் அழிந்து கொண்டு இருக்கிறது. வெறும் **4000 கொமோடோக்களே** உள்ளன. அவை தனித் தீவுகளில் வாழ்கின்றன.



சரி, கொமோடோக்கள் நமக்கு என்ன நினைவூட்டுகின்றன? ஆம், நம்முடைய தேவனின் வல்லமையை அவை வெளிப்படுத்துகிறது. நாம் தேவனுடைய வல்லமையை தெரிந்து கொள்வதற்காக அதை அவர் சிருஷ்டித்தார். ஏன் இவ்வளவு பயங்கரமான மிருகத்தை படைத்தார்? ஒருவேளை தேவனால் எல்லாம் கூடும் என்று மனிதன் உணர்ந்து கொள்ளத் தானோ. ஆமென்.

ஆகவே, சிறுபிள்ளைகளாகிய நாம் தேவனுக்கு எப்போதும் பயந்து, அவருடைய வல்லமையை உணர்ந்தவர்களாக வாழவேண்டும். சரியா?

***R.A.R. NAYAGAM***

# விசுவாசத்தின் அடிப்படைகள்

**நா**ம் தேவனுடைய வசனத்திலிருந்து கிறிஸ்துவின் சபை கி.பி. 30ல் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் நகரில் ஸ்தாபிக்கப்பட்டது என்று பார்த்தோம். சபைபற்றிய பாடத்தில், அடுத்த கேள்வி என்ன என்று பார்ப்போம். இந்தப் பிண்ணனி தகவல்களை மனதில் கொண்டு முதல் நூற்றாண்டில் மனம்மாற்றம் செய்யப்பட்டவர்கள் ஞானஸ்நானத்திற்குப் பிறகு எந்த சபையில் சேர்க்கப்பட்டார்கள்? என்ற கேள்வியைக் கேட்போம்.

முதலில் அவர்கள் சபையில் சேரவில்லை! அப். 2:47ல் நாம் வாசிக்கும்போது **கர்த்தர் ஜனங்களை சபையிலே சேர்க்கிறார்** என்பதை தேவன் தெளிவாக்குகிறார். இதில் மனிதர்களின் அங்கீகாரம் தேவையில்லை, சபையில் சேர்க்கிற வேலையை தேவன் தான் செய்கிறார்.

ஆனால், கர்த்தர் யாரை சபையில் சேர்க்கிறார்? இந்த வசனத்தில் தேவன் என்ன சொல்கிறார்? பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சேர்க்கிறார்! பெந்தெகொஸ்தே நாளில் யாரெல்லாம் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள்? நாம் பார்த்த படியாக சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அந்த வல்லமையான செய்தியினாலே குத்தப்பட்டு, இயேசுவினிடத்தில் தங்களுக்கு இருந்த விசுவாசத்தைக் காட்டி, தேவனுக்கேற்ற துக்கம் ஏற்பட்டு, என்ன செய்ய வேண்டும் என்று கேள்விகேட்டு, மனந்திரும்பி தங்கள் கடந்தகால பாவங்களிலிருந்து பாவமன்னிப்பெற ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் (அப். 2:36-41).

இந்த வசனங்களிலிருந்து நாம் இரட்சிக்கப்பட தேவன் எதைச் செய்ய சொல்லுகிறாரோ அதன்படி செய்யும்போது கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்க்கிறார் என்று நாம் முடிவுக்கு நாம் வரலாம்.

**இரண்டாவது**, புதிய ஏற்பாட்டில் சபையானது ஒருமையிலே பேசப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், அப்போது ஒரே ஒரு சபைதான் இருந்திருக்கிறது. அதை நிச்சயமாக நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? சபையைப் பற்றிய எல்லா தீர்க்கதரிசனங்களும் ஒருமையில் இருப்பதை நாம் பார்க்க முடியும். இதை கீழ்க்காணும் வசனங்களில் தேவன் நிரூபிப்பதைக் கவனியுங்கள்.

மத்தேயு 16:18ல் நாம் வாசிக்கும்போது நான் என் சபையைக் கட்டுவேன் என்று நம்முடைய இரட்சகர் தெளிவாகச் சொன்னார். அதை கவனிக்கிறீர்களா பிரியமானவர்களே! அவர் நூற்றுக்கணக்கான மார்க்கப் பிரிவினை சபைகளை ஸ்தாபிப்பேன் என்று சொல்லவில்லை. அவர் ஒரு

சபையைத் தான் கட்டுவேன் என்று சொன்னார். இயேசு ஒரு சபையை ஸ்தாபித்ததனால் மற்ற சபைகள் எல்லாம் எங்கேயிருந்து வந்தது என்று நினைக்கிறீர்கள்? இவைகள் இயேசுவல்லாத மற்ற மனுஷர்களிடத்தில் இருந்து வந்தது!

எபேசி 1:22,23ல் நாம் வாசிக்கும்போது இயேசு கிறிஸ்து சரீரமான சபைக்கு தலையாயிருக்கிறார். கவனியுங்கள், கர்த்தர் ஒரு சபைக்குதான் தலையாயிருக்கிறார், நூற்றுக்கணக்கான மார்க்கப்பிரிவினை சபைகளுக்கு அல்ல! அதுமாத்திரமல்ல, சபையானது அவருடைய சரீரமாக ஒருமையில் சொல்லப்பட்டிருக்கிறது.

எபேசியர் 4:4ல் நாம் வாசிக்கும்போது ஒரே ஒரு சரீரம்தான் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆனால், கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் சபை என்று நாம் பார்த்தோம். தேவன் ஒரே சரீரம் தான் இருக்கிறது என்று சொல்லும்போது அவர் ஏற்றுக் கொள்ளுகிற சபை ஒன்று தான் இருக்கிறது என்று சொல்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக தேவன் எபேசியர் 4:4யை வெளிப்படுத்தினபோது பல்வேறுப்பட்ட போதனைகளைப் போதித்து நூற்றுக்கணக்கான மார்க்கப்பிரிவினை சபைகளை ஏற்படுத்துவார்கள் என்று தேவன் அறிந்திருந்தார். இருந்தபோதிலும் அவர் ஏற்றுக்கொள்ளுகிற சரீரம் அல்லது சபை ஒன்றுதான் என்று சொன்னார். அவர் ஏற்றுக்கொள்ளுகிற சபை ஒன்று தான் என்று தேவன் சொல்லும்போது மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மார்க்கப்பிரிவினை சபைகளின் கதி என்ன? அவைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. கர்த்தருக்கு சித்தமானால் அடுத்தப்பாடம் நாம் படிக்கும் போது இன்னும் தெளிவாகப் பார்க்கலாம்.

1கொரி. 12:20ல் நாம் வாசிக்கும் போது, மறுபடியும் ஒரே சரீரம் தான் இருக்கிறது என்று தேவன் சொல்கிறார். அந்த ஒரே சரீரத்தில் அநேக அவயங்கள் அல்லது தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால், தேவன் ஏற்றுக்கொள்ளுகிற சரீரம் அல்லது சபை ஒன்றுதான்.

கொலோசெயர் 1:18யை வாசியுங்கள் கிறிஸ்துவே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் என்று வாசிக்கிறோம். அவருக்கு ஆவிக்குரிய சரீரமாகிய மெய்யான சபை ஒன்று தான் இருக்கிறது.

சபை என்கிற வார்த்தையானது உலகளாவிய சபையைக் குறிக்கக் கூடியதாக உள்ளது. இது பிராந்திய கிறிஸ்துவின் சபைகளை உள்ளடக்கி உள்ளது. மத்தேயு 16:18ல் நாம் ஏற்கனவே பார்த்தபடி இயேசு தன்னுடைய சபையைக் கட்டுவதாகச் சொன்னார், அது உலகமுழுவதிலும் உள்ள தன்னுடைய சபையைப்பற்றித்தான் பேசுகிறார். கொலோசெயர் 1:18ல் இயேசு சரீரமாகிய சபைக்குத் தலையாயிருக்கிறார் என்று கவனித்தோம்.

இரண்டாவது, மூல பாஷையிலிருந்து சபை என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தையை அந்தந்த இடங்களில் இருக்கின்ற

கிறிஸ்துவின் சபையைக் குறிப்பதற்காக உபயோகப்படுத்தியுள்ளார். புதிய ஏற்பாட்டுக்குச் சென்று சபை என்கின்ற வார்த்தையின் பயன்பாட்டைக் கவனிப்போம். கலாத்தியார் 1:2ல் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா பகுதியில் இருக்கிற கிறிஸ்துவின் சபைகளுக்கு அந்த நிருபத்தை எழுதினார். வெளி. 1:10, 11ல் நாம் வாசிக்கும்போது இயேசு அப்போஸ்தலனாகிய யோவானிடம் தான் கண்டவைகளை எழுதுமாறு சொன்னார். அடுத்து யோவானை என்ன செய்ய கர்த்தர் சொன்னார்? யோவான் எழுதின அந்த புஸ்தகத்தை ஆசியாப்பகுதியிலிருந்த கிறிஸ்துவின் சபைகளுக்கு அனுப்பும்படி சொன்னார்.

மூன்றாவது, தேவன் சபை என்ற வார்த்தையை தனிப்பட்ட பிராந்திய கிறிஸ்துவின் சபைகளைக் குறிப்பதற்காக உபயோகப்படுத்தியுள்ளார். ரோமர். 16:16ல் நாம் வாசிக்கும்போது பவுல் தான் இருந்த தனிப்பட்ட பிராந்தியக் கிறிஸ்துவின் சபைகளிலிருந்து ரோமாபுரியிலிருக்கிற கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துதல் அனுப்பினார்.

இப்போது, நாம் செய்ய வேண்டியதென்னவென்றால், புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து கிடைத்த தகவல்களை இன்று நாம் மத உலகில் காண்கின்றவைகளோடு ஒப்பிட்டுப்பார்ப்போம். இன்றைய நாட்களில் வித்தியாசமான உபதேசங்கள் செய்வதையும், புதிய ஏற்பாட்டில் காணப்படாத பெயர்களை சபைக்கு வைப்பதையும், தேவன் கட்டளையிடாத முறைகளில் அவரை ஆராதிப்பதையும் நாம் காண்கிறோம்.

மேலும் மார்க்கப்பிரிவினை என்ற வார்த்தை ஒரு பகுதி அல்லது முழுமையில் ஒரு பகுதி என்றும் அர்த்தம். அநேக பிராந்திய சபைகளைக் கொண்டுள்ள ஒவ்வொரு மார்க்கப்பிரிவினை சபையும் உலகளாவிய சபையின் ஒரு பகுதி என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தபடி தேவன், எதற்கு சபை என்கிற வார்த்தையை உபயோகப்படுத்துகிறாரோ அதற்கு ஒவ்வாததாக இருக்கிறது. அது மாத்திரமல்ல மார்க்கப்பிரிவினை சபைகள் மனிதர்களுடைய பெயர்களை தரித்திருக்கிறது. இது அப்போஸ்தலனாகிய பவுலால் கண்டிக்கப்பட்டுள்ளது. (1கொரி. 1:10-13) அந்த வசனங்களை வாசியுங்கள். 11 ஆம் வசனத்தைக் கவனியுங்கள். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள்ளே வாக்குவாதங்கள் ஏற்பட்டது என்று பவுலுக்கு சொல்லப்பட்டது. 12 ஆம் வசனத்தில் ஒரு குறிப்பிட்டப் பிரச்சனையை பவுல் அடையாளம் காட்டுகிறார். கிறிஸ்தவர்கள் கீழ்க்காணும் காரியங்களை சொல்லிக்கொண்டார்கள்.

நான் பவுலைச் சேர்ந்தவனென்றும் , நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், சொல்லிக் கொண்டார்கள். வேறொரு வார்த்தையில் சொன்னால் பவுல், அப்பொல்லோ, கேபா (பேதுரு) போன்ற பல்வேறு மனிதர்களை பின்பற்றி தங்களைப் பிரித்துக் கொண்டார்கள்.

பிரியமானவர்களே, இதுதான் மத உலகில் பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. பல்வேறு மனிதர்கள் பல்வேறு சபைகளை தொடங்கியிருக்கிறார்கள். ஜனங்களும் கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக அவர்களுடைய போதனைகளைப் பின்பற்றுகிறார்கள். இந்த செயலை தேவன் முதல் நூற்றாண்டில் கண்டித்தார் இந்நாட்களிலும் கூட தேவன் தம்முடைய வசனங்களினால் கண்டிக்கிறார்.

இவ்விதமான பிரிவினைகளை தேவன் கண்டிக்கிறார் என்று நாம் எப்படி அறிவோம்? 13 ஆம் அவர் கேட்கும் கேள்வியைக் கவனியுங்கள். முதலாவது, கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? நிச்சயமாக இல்லை! அதாவது, இதன் பொருள் இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்களுக்குள்ளே பிரிவினையை உண்டு பண்ணக்கூடாது என்பதாகும்.

இரண்டாவது கேள்வி, பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப் பட்டான்? நாம் பல்வேறு மனிதர்களை பின்பற்றக்கூடாது என்பது இந்தக் கேள்வியின் கருத்தாகும்.

மூன்றாவது கேள்வி, பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? எந்தவித சந்தேகமுமின்றி இதற்கான பதில், **இல்லை** என்பதாகும். அவர்கள் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். நாமும் அப்படியே செய்ய வேண்டும்.

பத்தாம் வசனத்தில் இந்த விதமானப் பிரிவினைக்கு தேவன் சொல்கிற தீர்வை கவனியுங்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களிடத்தில் எந்தவிதப் பிரிவினையும் இருக்கக்கூடாது என்று தேவன் கட்டளையிடுகிறார். அவருடைய தீர்வு என்ன? நாம் ஏகமனதும், ஏகயோசனையும், உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாமெல்லாரும் ஒரே காரியத்தைப் பேச வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் அதை எப்படி செய்ய முடியும்? அதற்கு ஒரே வழிதான் இருக்கிறது! நாம் தேவனுடைய வசனத்தை மாத்திரம் பேசவேண்டும். அதோடு நாம் ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ செய்யக்கூடாது!.

பிரியமானவர்களே, இந்த வசனங்களிலிருந்து தெளிவாக ஒரு காரியத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பல வருடங்களாக மனிதர்களால் கட்டப்பட்ட மார்க்க பிரிவினை சபைகளை தேவன் கண்டித்து வருகிறார். அப்படிப்பட்ட சபைகளை தேவன் கண்டித்துகொண்டு வருகிறார். அப்படிப்பட்ட சபைகளில் நீங்கள் அங்கத்தினர்களாக இருப்பீர்களானால் அந்த சபையிலிருந்து வெளியே வந்து கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்று ஒன்றான மெய்ச்சபையாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். அப்படி கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படிய எல்லா உதவிகளையும் செய்ய நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்.

# தேவன் மனிதர்களை புகழ்கிறாரா?

**தி**ருமறை ஆசான் வாசகர்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் அன்போடு வாழ்த்தி இந்த தேவ செய்திக்கு வரவேற்கிறேன். சுகமாயிருப்பீர்களாக .

தேவன் மனிதர்களை புகழ்ந்திருக்கிறாரா? கேள்வி சற்று வித்தியாசமாக இருக்கின்றதல்லவா? ஆனால், பவுல் தன் நிருபத்திலே 2 கொரி. 10:18 புகழ்ந்திருக்கிறார். அதுவும் எப்படி என்கிறீர்கள். பூமியெங்கும் அப்படிப்போல ஒருவரும் இல்லை என்று சொல்லும் அளவு புகழ்ந்து அவர்கள் உத்தமர்கள் தான் என நிருபித்திருக்கிறார்.

இத்தனைக்கும் அவர்களும் நம்மைப்போல சாதாரண மனிதர்கள்தான் எப்படி அவர்களால் முடிந்தது? என்ன 6 வது அதிகாரத்திற்கு திருப்புங்கள்.

**கர்த்தர் கட்டளையிட்டதெல்லாம் செய்து முடித்த "நோவா" (ஆதி. 6:1-22)**

நோவாவின் காலத்து ஜனங்கள் பாவத்திலேயே மூழ்கிப்போய் தேவனையே மறந்து, மனம்போன போக்கில் வாழ்ந்து, தேவனே மனிதனை உண்டாக்கினதற்கு மனஸ்தாபப்படும் அளவிற்கு கொடுமையான மக்களாக இருந்துள்ளனர் பாருங்கள். தேவன் பூமியிலுள்ள மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன எல்லாவற்றையும் அழிக்கச் சித்தமானார்.

கிராமங்களில் நெல் அறுவடையின்போது, அடுத்த முறை விதைப்பதற்காக அறுவடை செய்த நெல்லில் நல்லமணிகளாக, பலன் கொடுக்க கூடியதாக, அதாவது இப்படித்தான் நெல்மணி இருக்க வேண்டுமென. பார்த்து, பார்த்து, பொறுக்கி எடுத்து அதனை சேர்த்து வைப்பார்கள். தேவன் பூமியிலுள்ள மனுஷர் எல்லாரைப் பார்கிலும் நோவாவை நீதிமானாய் கண்டார் என்றால்! தேவன் மனிதன் தன்னிடம் எப்படி நடத்து கொள்ள வேண்டுமென எண்ணி அவனை ஜீவ ஆத்துமாவாக சிருஷ்டித்தாரோ; அப்படியெல்லாம் நோவா வாழ்ந்திருக்கிறான் என்று தானே அர்த்தம். என்ன ஆச்சர்யமான மனிதர் பாருங்கள்.

அதுமாத்திரமல்ல கொப்பேர் மரத்தினால் (300 முழ நீளம், அகலம் 50 முழம், உயரம் 30 முழம்) பேழையை உண்டாக்க வேண்டும் தேவன் சொன்னபடி அறைகளையும் உண்டாக்க வேண்டும். மேலும், மிருகங்களில் ஒவ்வொரு ஜோடு, பறவைகளில் ஒவ்வொரு ஜோடு ஊர்வனவற்றில் ஒவ்வொரு ஜோடு, பேழையிலே சேர்க்க வேண்டும். மாத்திரமல்ல மிருகங்கள், பறவைகள், ஊர்வனவற்றிற்கான உணவையும் சேமிக்க வேண்டும்.

இவையெல்லாம் எப்போது என்கிறீர்கள். மழையென்றால் என்னவென்றே தெரியாத காலத்தில் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும், ஜனங்களின் பரிகாசம், அவிசுவாசம், ஏளனப் பார்வையுள்ள மக்கள் நடுவே தானும் முதல் தரமான வாழ்க்கை வாழ்ந்தான். தன் மூன்று குமாரர்கள், மூன்று மருமகள்களையும், தன் மனைவியையும் தகுதிப்படுத்துவது என்பது எவ்வளவு கடினமானது என யோசியுங்கள்.

இத்துடன் கூடவே பேழையை கட்டத்துவங்கியது முதல் 120 வருடங்கள் நீதியைப் பிரசங்கித்துக் கொண்டும் இருந்துள்ளார். நோவாவினிடத்தில் நம்மை வைத்துப்பார்ப்போம். முடியுமா? அப்பப்பா! நினைக்கவே தலைகிறுகிறுக்கிறது இல்லையா? ஆனால், ஒன்றை நாம் மறந்து விடகூடாது, நோவா நம்மைப்போலவே சீரபாடுகறள் உடைய ஒரு மனிதன் தான் நோவாவினால் எப்படி? முடிந்தது நம்மால் ஏன் முடியவில்லை? நோவாவிற்கு தேவனுடைய வார்த்தைகள் உயிர்மூச்சு, நமக்கு? (1 பேதுரு 2:25) (எபி. 11:7) (11தீமோ 3:12) தேவன் மிகச் சரியான நபரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றார் இல்லையா? வாருங்கள் தேவன் புகழ்ந்த இன்னும் ஒரு உத்தமனைப் பார்ப்போம்.

**II <u>தேவனுடைய வீடெங்கும் உண்மையாயிருந்த "மோசே"</u> (எபி. 3:2)**

எண்ணாகமம் 12:3 மோசே பூமியிலுள்ள மனுஷர் எல்லாரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாய் இருந்தான். தேவன் மோசேயோடு ஒரு சிநேகிதனைப் போல பேசினார் (எண். 12:7-8) இந்த உண்மையுள்ள மனிதரிடம் யாத்திராகமம் 25,26,27,28 அதிகாரங்கள் மற்றும் 31,34,35-40 அதிகாரங்கள் ஆசாரிப்பு கூடார வேலைகளை செய்யும்படி ஒப்புக் கொடுக்கப்படுகிறது. நமக்கெல்லாம் வாசித்துப்பார்க்கவே மலைப்பாக இருக்கும்போது இந்த உண்மையுள்ள மனிதர் யாத் 40:16 கர்த்தர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தார் என்ன! ஒரு ஆச்சர்யம் என்று பாருங்கள் நம்மிடம் தேவன் இலகுவான காரியங்களையே எதிர்பார்க்கிறார்.

1. அப். 20:7 வாரத்தின் முதல் நாளில் அப்பம்பிட்டு ஆராதியுங்கள் கோதுமை மாவும், திராட்சை பழமும் உலகின் எல்லா இடங்களிலும் கிடைக்கிறது. நாம் இதை செய்ய வேண்டியது எத்தனை அவசியம்.

தேவன் மோசேயிடம் கொடுத்தது போல கடினமான பணியை தரவில்லை. கிறிஸ்து வாரத்தின் முதல் நாள் உயிர்த்தெழுந்தார். (மத். 28:1,6) (அப். 2:42) நம்மால் வாரந்தோறும் அப்பம் பிட்கமுடிகிறாதா? மூன்று வாரத்திற்கு ஒரு முறை, அல்லது மாதத்தின் முதல் நாள் ஞாயிறு அப்பம் பிட்கலாம் என்று புதிய ஏற்பாட்டில் எந்த வசனம் சொல்கிறது. அல்லது கர்த்தருடைய வசனத்தை மாற்றி போதிக்கும் அதிகாரத்தை யார் கொடுத்தது?

மாதம் ஒருமுறை அப்பம்பிட்டால் போதும் என்கிற துணிகரமான போதனை எங்கிருந்து வந்தது. இந்த இலகுவான, மிகவும் எளிதான காரியத்தையே நம்மால் செய்ய முடியவில்லையே ஏன்? (லூக்கா 6:46), யோவான் (14:23) (1யோவான் 5:3)

இஸ்ரவேலர்களுக்குள் மோசே : மோசே தன்னுடைய 120 ஆண்டுகால வாழ்வில் முதல் 40 வருடம் மட்டுமே பார்வோனின் அரண்மனையில் வாழ்ந்தான். பிறகு (எபி 11:25) அவைகள் அநித்தியமான பாவசந்தோஷம் என அதனை வெறுத்து துன்பப்படுவதை தெரிந்து கொண்டான். (அப். 14:32) இஸ்ரவேலர்களை வழிநடத்திச் செல்லும் மிகப்பெரிய பொறுப்பை ஏற்றார். எகிப்தில் பார்வோனுக்கு முன் மிகப் பலத்த காரியங்களைச் செய்தார். ஜனங்களை சிவந்த சமுத்திரம் மதிலாக நிற்க பலத்த அற்புதத்தின் மூலம் நடத்திக் கொண்டு வந்த மோசேயையே கல்லெறிந்து கொல்லப்பார்த்தனர்.

1 கொரி 10:1-11 நாமெல்லாரும் எப்படி இருக்ககூடாது என்பதற்கு அவர்கள் எச்சரிப்பானார்கள். இப்படிப்படிப்பட்ட ஜனங்களுக்குள்ளே தானும் உத்தமமாய் வாழ்ந்து, ஜனங்களையும் 16 லட்சம் புருஷர்கள் (யாத். 12:37) நடத்திக்கொண்டு தேவன் கட்டளையிட்ட காரியங்களையெல்லாம் செய்து முடிப்பது என்பது எவ்வளவு பிரமிப்பான காரியம். மோசே நம்மைப்போலவே சாதாரண மனிதன் அவரால் தேவனுடைய சித்தத்தை செய்ய முடிந்தது நம்மால் ஏன் முடியவில்லை? எது நம்மைத் தடுக்கின்றது (எபி. 11:25) அநித்தியமான பாவசந்தோஷங்களா? நாம் வகிக்கும் பதவிகளா? படிப்பா? ஜாதியா? எதுவாக இருப்பினும் அவைகள் பரலோக வாழ்விற்கு முன்பு குப்பைதான். (பிலி 3:7-11) (மத். 17:1-5).

**III <u>உத்தமனாகிய "யோபு"</u> (யோபு 1:1,7,8)**

இந்த மனிதனின் உத்தமத்தை குறித்து தேவனே சாத்தானிடம் சவால் விடுகிறாரே! என்ன ஆச்சர்யமான மனிதன் பாருங்கள் உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குபயந்து பொல்லாப்புக்கு விலகுவது இவையெல்லாம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. யோபுவிடம் செல்வம் இருந்தது, (யோபு. 29:12) ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் உதவினான் (யோபு 29:14) நீதியும், நியாயமும் யோபுவுக்கு உடுப்பாக இருந்தது. ஒலிமுக வாசலில் அதிகாரம் இருந்தது அதை முறை கேடாக பயன்படுத்தவில்லை.

யோபுக்கு இருந்த செல்வத்திற்கு அவர் பல திருமணங்கள் செய்திருக்கலாம் ஆனால் (யோபு 31:1, 9-11) தன் கண்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார். யோபு தன் சரீரம் முழுவதும் ஆரோக்கியம் கெட்ட பிறகும் (யோபு 28:5) என் ஆவிபிரியும் மட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன். என்றான் என்ன! ஒரு ஆழமான எவராலும் அசைக்க முடியாத விசுவாசம் பாருங்கள்.

***A. <u>நம்முடைய நிலை பிரியமானவர்களே?</u>***

பிதாவின் சித்தத்தை செய்து முடித்த நமதாண்டவர் (யோவான் 17:4)

இயேசுவை யூதர்கள் தேவகுமாரனமாக ஏற்றுக் கொள்ளாததோ, யூதாஸ் துரோகியானதோ, பேதுரு கிறிஸ்துவை மறுதலித்ததோ இயேசுவை

கல்லெறியப்பார்த்தது, பெயல் செபூலின் தலைவன் என்று சொன்னதோ. கோரமான சிலுவை மரணமோ எதுவுமே நம் ஆண்டவருக்கு பிதாவின் சித்தம் செய்ய தடையாக இல்லை. இதை விட ஒருவருக்கு என்ன தடைகள் வரப்போகிறது. அந்த ஆண்டவர் நமக்காக ஜெபித்த ஜெபம் (யோவா 17:20-23)

## *B.* <u>*நாமெல்லாரும் ஒன்றாயிருப்பது :*</u>

(மாற் 16:16) கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். (1 யோவா 3:26,27) அந்த ஞானஸ்நானம் பெற்ற புதிய மனிதனுக்கு கிறிஸ்தவன் என்று பெயர். அந்த நபர் (அப். 20:28) (1 கொரி. 6:2) கிறிஸ்து இரத்தம் சிந்தி, சம்பாதித்த சபையிலே அங்கமாக இருக்க வேண்டும். அது கிறிஸ்துவின் சபையாக இருக்க வேண்டும். சுத்த மனசாட்சியுடைய ஒருவரும் இதனை மறுக்க முடியாதே.

பிசாசு நம்மையும், கிறிஸ்தவ சமுதாயத்தையும் கள்ள உபதேசத்தினால் திண்டாடிக் கொண்டிருக்கிறான். சத்தியத்தின் மேல் அன்பு கொண்டவர்கள் இதனை சகிக்கமாட்டார்கள். நம் முன்னால் பெரிய சவால் நிற்கிறது! நீங்கள் வெற்றி பெறப்போகிறீர்களா! வீழ்ந்துபோகப்போகிறீர்களா? ஒப்புக்கு கிறிஸ்தவர்களா? ஒப்புக்கொடுத்து வாழும் கிறிஸ்தவர்களா? நல்ல தீர்மானம் செய்வோம் ஆமென்! நீங்கள் வெற்றி பெற வேண்டும் என ஜெபித்து செய்தியை நிறைவு செய்கிறேன்.

அன்புடன்,

***S. Pitchaimuthu***

**ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!!**

**எதிர்வரும் மே மாதம் 1-3, 2006** ஆகிய தேதிகளில் நடைபெறும் ஒன்பதாவது வேனிற்கால வேதாகம முகாமில், தேவனுடைய நாமம் **மகிமைப்படும்படியாகவும்**, அநேக ஆத்துமாக்கள் **இரட்சிப்படையும்படியாகவும்**, பரிசுத்தவான்கள் ஆவியில் **பெலப்படும்படியாகவும்**, கிறிஸ்து சபையின் எல்லை **விரிவடையும்படியாகவும்** ஊக்கமாக ஜெபியுங்கள்.

– ஆசிரியர்.

# நீ அங்கே கன்மலையில் நில்லு...

(சென்ற மாதத் தொடர்ச்சி)

**மோ**சேக்கே இந்த நிலை என்றால் இன்றைக்கு இருக்க கூடிய நம்முடைய நிலை என்ன? அல்லது போதகர்களின் நிலை தான் என்ன? யோசியுங்கள் ஒருவேளை இன்றைய காலகட்டத்தில் தேவன் மனம்மாறி இப்படிப்பட்ட ஊழியர்களுக்கு தரிசனம் தருகின்றாரா? வசனத்தைப் பாருங்கள் பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண். 23:19) என்கிறது எனவே அவர் சொன்ன வார்த்தையிலிருந்து ஒரு போதும் தவறமாட்டார்.

மோசேயின்மேல் தேவனுக்கு கிருபையும் இரக்கமும் இருந்தால் அவனிடத்தில் இதோ என்னண்டையில் ஒரு இடம் உண்டு நீ அங்கே கன்மலையில் நில்லு, என் மகிமை கடந்து போகும் போது நான் உன்னை அந்த கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகும் மட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன் பின்பு என் கரத்தை எடுப்பேன் அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய் என் முகமோ காணப்படாது என்றார் (யாத். 33:20-23).

கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களே பரிசுத்தவானாகிய மோசே தேவனுடைய பின்புறத்தை மாத்திரம் பார்த்தான் அவருடைய முகத்தை பார்க்கவில்லை. ஆனால், இன்றைய கள்ளப்போதகர்கள் தங்களிடத்தில் தேவன் முகமுகமாய் பேசினார் என்று வாய் கூசாமல் பொய் சொல்கிறார்கள். ஒருவேளை நீங்கள் கேட்கலாம் புதிய ஏற்பாட்டில் தேவன் தரிசனம் கொடுக்கலாமே என்று, வசனம் சொல்வதை கவனியுங்கள். அதரிசனமான தேவன் (கொலோ 1:15) அதரிசனமுள்ள ராஜன் (1 தீமோ 1:17) அதரிசனமானவர் (எபி. 11:27) என்கிறது. அத்தோடு மாத்திரமல்ல தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதும் போது மனுஷரில் ஒருவரும் கண்டிராத வரும் காணக் கூடாதவருமாயிருக்கிறவர் (1தீமோத் 6:16) என்று அழுத்தம் திருத்தமாக எழுதுகிறார்.

இன்னமும் சில கள்ளப் போதகர்கள் இருக்கிறார்கள் அவர்கள் தாங்கள் பரலோகம் சென்று வந்ததாக அடுக்கடுக்கான கதைகளை எடுத்து விடுகிறார்கள். அதையும் மக்கள் "ஆ" வென்றுதான் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பரலோக மைந்தன் இயேசு கிறிஸ்து இவர்களை குறித்து சொல்வதை கேளுங்கள் பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்தி லிருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனும் இல்லை (யோவா 3:13) என்று திட்டவட்டமாக கூறுகிறார். பரலோகம் போய் வந்தேன், தேவனை பார்த்தேன், ஒளி வந்து என் மீது

விழுந்தது அதனால் இரட்சிக்கப்பட்டேன் என்று கூறும் அந்தி கிறிஸ்துவை நம்பாமல் வேத வசனங்களை நம்புங்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பரமேறும் போது, நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் (மத். 28:18-20) என்ற பிரதான கட்டளையை அப்போஸ்தலர்களுக்கு கொடுத்தார். ஆகையால், ஒருவன் வசனத்தை ஏற்றுக் கொள்வதினால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும்.

இனிமேல் இப்படி பட்ட கள்ளப்போதகர்களுக்கு நீங்கள் செவி கொடாமல் தேவனுக்கு செவி கொடுங்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் முழுக்குதல் ஞானஸ்நானத்தை பெறுங்கள். இதுவே தேவன் கொடுக்கும் இரட்சிப்பின் வழியாகும். இதுவே உங்களை மறுமையில் பரலோகத்தில் சேர்க்கும். இரட்சிக்கப்பட்ட பிறகு வேத வசனங்களின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையை பரிசுத்தமாக மாற்ற வேண்டும் அப்போதுதான் அந்த இரட்சிப்பு நிலைத்திருக்கும், அதற்கு தேவன் தாமே உங்களுக்கு உதவி செய்வராக ஆமென்!

**N. *பர்னபாஸ்*,** திருப்பூர்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. *சமுத்திரத்தின் சராசரி ஆழம் 13,000 அடிகள். நிலத்தின் சராசரி உயரம் 2250 அடி உயரம் எனவே சமுத்திரத்தின் ஆழம் நிலத்தின் ஆழத்தை விட கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகமானது.*
2. *பூமியின் மேற்பரப்பில் 71% தண்ணீர் இருக்கிறது. இது இருந்தால் தான் தட்ப வெப்பநிலை சமச்சீராக காணப்படும். அப்போது தான் ஆவியாகுதல் சிறப்பாக நடைபெற்று மேகங்கள் ஈரப்பதத்தைக் கொண்டு சென்று நிலத்தில் மழை பெய்யச் செய்யும்*
3. *நம்முடைய காதுக்கு 2500 வெவ்வேறு ஓசைகளை துல்லியமாக கண்டுபிடிக்கும் சக்தி உண்டு.*



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.**




தமிழன் TV சனி காலை 7:15 - 7:30
தமிழன் TV ஞாயிறு இரவு 9:45 - 10:00
SS மியூசிக் TV திங்கள் காலை 7:00 - 7:15

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட**

**ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.